


இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்



www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com



தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 8 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 32 – வியாழக்கிழமை 17 ஆகஸ்ட் 2023 – கோவை ★★ 12 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 8 : Thiruvalluvar Year - 2054 - Aadi 32 - Thursday 17 August 2023 - Kovai ★★ 12+8 Pages ₹ 5.00





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுதந்திரத் திருநாளையொட்டி நேற்று முன்தினம் (15.8.2023) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து சுதந்திரத் திருநாள் சிறப்புரையாற்றினார்.

## ஒற்றுமையால் கிடைத்த விடுதலையை அதே ஒற்றுமையால் காப்போம்!

# வேற்றுமையை விதைக்கும் சக்திகளை வேரோடு சாய்ப்போம்!

## தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

**சென்னை, ஆக.17 -**

**சென்னை - தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் 77வது விடுதலை நாளையொட்டி, தேசியக் கொடியை ஏற்றிவைத்து உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "ஒற்றுமை யால் கிடைத்த விடுதலையை அதே ஒற்றுமை யால் காப்போம்" என்றும் "வேற்றுமையை விதைக்கும் சக்திகளை வேரோடு சாய்ப்போம்!" என்றும் சூளுரை விடுத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.8.2023) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து ஆற்றிய சுதந்திரத் திருநாள் விழாப் பேருரை வருமாறு: -

சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, நீதி அரசர்களே, தமிழ்நாடு அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, மேயர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே,

தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளே,

காவல்துறை தலைமை இயக்குநர் உள்ளிட்ட காவல்துறை அதிகாரிகளே,

சிறப்பு விருந்தினர்களே,

விடுதலைப் போராட்ட தியாகிகளே,

அவர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்களே,

பல்வேறு விருதுகளை பெறுவதற்காக வருகை தந்திருக்கக்கூடிய பெரியோர்களே, தாய்மார்களே,

என் கண்ணின் மணிகளான மாணவச் செல்வங்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

பட்டொளி வீசிப் பறக்கும் மூவண்ணக் கொடிக்கு முதல் வணக்கம்! அதன் நிழலில் வாழ்கின்ற நாட்டு மக்கள் அனைவருக்கும் நல்வணக்கம்!

### கலைஞர் நூற்றாண்டில் கொடி ஏற்றும் வாய்ப்பு!

77வது ஆண்டினைத் தொடங்கியுள்ளது இந்திய ஒன்றியத்தின் விடுதலை நாள். இந்திய ஒன்றியத்தின் முக்கியமான அங்கம் நம் தமிழ்நாடு.

மூத்த மொழியாம் செம்மொழித் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட நம் தமிழ்நாடு, இடைக்காலத்தில் சென்னை மாகாணம், மெட்ராஸ் பிரசிடென்சி, மதராஸ் மாகாணம், மெட்ராஸ் என்று அழைக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி அமைந்த பிறகு பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் தமிழ் மண்ணின் முதலமைச்சராக ஆன பிறகுதான், 1967ஆம் ஆண்டு ஜூலை 18ஆம் நாள் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டப்பட்டது.

'ஒரே ஒரு சங்கரலிங்கனார்தான் செத்துப் போயிருக்கிறார் என்று நினைப்பீர்களேயானால் தமிழ்நாடு என்ற ஒவ்வொரு எழுத்துக்கும் சேர்த்து ஐந்து உயிர்களைத் தரத் தயாராக இருக்கிறோம்' என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் குரல் கொடுத்தவர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்!

'சென்னை மாகாணத்தில் இருந்த பிற மொழி பேசும் எல்லா மாநிலங்களும் தனித் தனியாகப் பிரிந்து போனபிறகு தமிழ்நாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டாமல் ஏன் இருக்க வேண்டும்? அதனைப் பார்த்துக் கொண்டு நான் ஏன் உயிரோடு இருக்க வேண்டும்?' என்று கேட்டவர் தந்தை பெரியார்.

இத்தகைய பார்போற்றும் தமிழ்நாடு மாநிலத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நான், மூன்றாவது ஆண்டாக இந்திய நாட்டின் தேசியக் கொடியை ஏற்றி வைக்கிறேன். 400 ஆண்டுகள் பழமையான இந்த புனித ஜார்ஜ் கோட்டையின் கொத்தளத்தில் மூவண்ணக் கொடியை ஏற்றுவதில் நான் பெருமிதம் கொள்கிறேன். இந்தக் கொடியேற்றும் வாய்ப்பை எனக்கு வழங்கிய தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கங்கள்!

## விடுதலைப் போராட்ட தியாகிகளின் குடும்ப உறுப்பினர்களின் ஓய்வூதியம் ரூ.11 ஆயிரமாக உயர்வு!

### விடுதலை வீரர்களை கழக அரசு போற்றுவதில் யாருக்கும் சளைத்தது அல்ல!

நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பியாம் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா ஆண்டில் கோட்டையில் நின்று கொடியேற்றும் வாய்ப்பை நான் பெற்றமைக்காகப் பெருமை அடைகிறேன்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலத்தின் முதலமைச்சர்கள் அனைவருக்கும் விடுதலை நாளன்று கொடியேற்றும் உரிமையைப் பெற்றுத் தந்து, மாநில சுயாட்சிக் கொடியைக் காத்த தலைவர்தான் கலைஞர் அவர்கள். அவரது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது என்பது தமிழை, தமிழ்நாட்டைக் கொண்டாடுவதாகும்.

விடுதலை வீரர்களைப் போற்றிப் பாராட்டுவதில் திராவிட முன்னேற்றக் கழக அரசு யாருக்கும் சளைத்தது அல்ல. அதற்கு சில எடுத்துக்காட்டுகளை இங்கே எடுத்துரைக்க விரும்புகிறேன்.

- மாவீரன் பூலித்தேவனுக்கு, நினைவு மண்டபம்!
- பாஞ்சாலங்குறிச்சியில், வீரபாண்டிய கட்டபொம்மனுக்குக் கோட்டை!
- மாவீரன் சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கு வீடு!
- மகாகவி பாரதியின் வீடு, அரசு இல்லம் ஆனது!
- பெருந்தலைவர் காமராசருக்கு, மணிமண்டபம்!
- மூதறிஞர் இராஜாஜிக்கு, நினைவாலயம்!
- தில்லையாடி வள்ளியம்மாளுக்கு, மணிமண்டபம்!
- வீரவாஞ்சியின் உறவினருக்கு, நிதி!
- வ.உ.சி. இழுத்த செக்கு, நினைவுச் சின்னம் ஆனது!
- விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு, இலவசப் பேருந்து பயணம்!
- தியாகிகளுக்கு, மணிமண்டபம்!
- விடுதலைப் பொன்விழா நினைவுச் சின்னம்!
- விடுதலைப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் அவர்களுக்கு நினைவு மண்டபம்
- தியாகி ஈஸ்வரன் அவர்களுக்கு அரங்கம்
- தியாகி விஸ்வநாத தாஸ் வாழ்ந்த இல்லம் புதுப்பிப்பு!
- நேதாஜி சுபாஷ் சந்திர போஸுக்குச் சிலை!
- தியாகி கக்கனுக்குச் சிலை!
- சிப்பாய் கலகத்துக்கு நினைவுத் தூண்!


தொடர்ச்சி 3ஆம் பக்கம்




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.8.2023) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் சுதந்திரத் திருநாளையொட்டி நடைபெற்ற காவல்துறையின் அணிவகுப்பினை பார்வையிட்டார்.

## "தகைசால் தமிழர்"



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.8.2023) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், தமிழ்நாட்டிற்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றிய திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களுக்கு 'தகைசால் தமிழர்' விருதுடன், 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழை வழங்கி சிறப்பித்தார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.